கருத்துப் போட்டி 47 முடிவு

"கார் பந்தயம்!" சித்திரக்கதை கருத்துப் போட்டியில், புரூஸ்-லீ நண்பர்களுடன் காட்டும் பரிவு பற்றி கேட்டிருந்தோம்.

ஜி.எம்.ஜனார்த்தனம் (மதுரை 9) விஜயநிர்மலன் (ராணிப்பேட்டை) வி.ராணி (மேட்டுப்பாளையம்) ஏ.ஷோபனு (பள்ளத்தூர்) சிவகுமார் (சாயிபாபா காலனி, கோவை-38) ஆர்.செல்வம் (எழுமாத்தூர்) டி.நாகராஜன் (கோ.புதூர், மதுரை) ஆகியோர் சிறந்த கருத்துக்களை எழுதி இருந்தனர்.

ஆனால் மிகச் சிறந்த கருத்தை எழுதியதாக தேர்ந்து எடுக்கப்பட்டு அதற்காக ரூ.50 பரிசு பெறுபவர் எம்.முருகேசன் (தட்டச்சர்);

குருமூர்த்தி ஆவண எழுத்தர்,
2, நெ.இணை சார்-பதிவகம்,
நாமக்கல். (நாமக்கல் வட்டம்)

அவரது கருத்து வருமாறு:-

"புரூஸ்-லீ உலக புகழ் பெற்ற மாவீரர். அப்படிப்பட்ட ஒருவரிடம் தன்னடக்கமும் பரிவு உணர்ச்சியும் இருக்கிறது என்றால் அது அவரின் புகழை மேலும் பல மடங்கு உயர்த்துவதாகவே அமையும்.

அப்படிப்பட்ட புரூஸ்-லீ, தன் பால்ய நண்பன் பிராங்கோவிடம் மிகுந்த பரிவு உணர்ச்சி கொண்டவராக காணப்படுகிறார். பிராங்கோவிற்கு மாத்யூ என்பவனால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்த்து, பிராங்கோ கார் பந்தயத்தில் ஜெயிக்க வேண்டுமே என அவர் எண்ணும்போதும், "கார் பந்தயத்தில்" பிராங்கோவின் காரின் பெட்ரோல் டாங்க் உடைந்தவுடன் பிராங்கோவை காப்பாற்ற வேண்டுமே என அவர் துடிக்கும்போதும் சரி, சேதமடைந்த காரைப் பற்றி பிராங்கோ கூறுகையில், "கார் முக்கியம் அல்ல, நீதான் முக்கியம்" என்று அவர் பதறும்போதும் சரி அவரின் பரிவு உணர்ச்சியில் ஓர் உயிரோட்டத்தைக் காண முடிகிறது. மேலும்,

பிக்பாஸிடம் பிராங்கோவின் தாய், தந்தையர் பற்றிய உண்மையை தெரிந்து கொண்டு அந்த கொடியவர்களிடம் இருந்து பிராங்கோவை காப்பாற்றும் இடத்திலும் மிக்க துடிப்புடன் செயல்பட்டு இருக்கிறார் புரூஸ்-லீ.

இதற்கிடையில் தன் சக நண்பன் பின்னியின் கவலைக்கான காரணத்தை அவர் அறிய துடிப்பதும், அவனது கவலையை போக்கும் முயற்சியில் ஈடுபடுவதும் அவரின் பரிவு உணர்ச்சிக்கு ஓர் அத்தாட்சியை சேர்க்கிறது.

ஆக இதற்கெல்லாம் சிகரமாக, தன்னால் ஒரு தனி உல்லாச கப்பலையே அமர்த்தி கொண்டு போகும் அளவிற்கு வசதியுடையவராய் இருந்தும் தனது பால்ய நண்பனுக்காக அந்த சரக்கு கப்பலிற்கு காவலாக, அதே கப்பலில் வேலை செய்துதான் சாப்பிட வேண்டும் என்ற நிலையிலும் நண்பனுக்காக இடர்பாடுடன் அந்த சரக்கு கப்பலில் பயணம் செய்வது புரூஸ்-லீ. பரிவு உணர்ச்சிக் கோபுரத்தில் பதித்த பொற்கலசமாக, அதுவும் அந்த பொற்கலசத்திலே பதித்த வைரமாக ஜொலிக்கிறது."

இவ்வாறு முருகேசன் கூறியுள்ளார்.

ராணி காமிக்ஸ்—57
(மாதம் இருமுறை இதழ்)

நவம்பர் 1—14
1986

துப்பறியும் தீரர் டியோ தோன்றும் எகிப்திய மம்மி!

எ.ம-1

கொஞ்ச நேரத்தில் அந்தப் — பெண்ணின் நாய் வீடு திரும்பியது.
என்ன அதிசயம்! அங்கே சுற்றிய பின் என் கிழட்டு நாய் இளம் குட்டி நாயாக திரும்புகிறதே!
மறுநாள் காலையில்—
அந்த ஆசிரமத்தினுள் போன என் நாய் இளம் நாயாக மாற காரணம் என்ன?
அடுத்த தெருவில் ஒரு துப்பறிவாளர் இருக்கிறார். அவர் பெயர் தியோ அவரிடம் சொல்லி, இந்த மர்மத்தை — கண்டுபிடிக்க சொல்லலாம்!
துப்பறியும் நிபுணர் தியோவை சந்தித்த அந்த பெண்மணி தன் நாய் பற்றி கூறினாள். அதைக் கேட்ட தியோ—
உம்...அப்படியா? என் துப்பறியும் கருவியை எடுக்கிறேன்...உப்...
என்ன அதிசயம்! மிஸ்டர் தியோ! அங்கே பாருங்க! என் புஸ்ஸி, மீண்டும் கிழ — நாயாக மாறுகிறது!

இப்போ நாயிக்கு திடீர் என்று 10 வயது அதிகம் ஆகிவிட்டது! எனது மற்ற வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு இந்த— மர்மத்தை துப்பு துலக்குகிறேன்.
CRIMES SOLVED WITH SPIRIT & SKILL
இவர் பெரிய துப்பறிகிற நிபுணர் மாதிரி பந்தா காட்டுகிறார்! உண்மையில் திறமை இருக்கா? இல்லை வெத்து வேட்டா?
அன்று இரவு "ஆசிரம"த்தை நோக்கி தியோ போனார்.
உம்! இந்த மர்மத்தை துலக்கினால் எனக்கு நல்ல பெயர் கிடைக்கும். பணமும் கிடைக்கும். முதலில் ஒரு கார் வாங்குவேன்!
ஆசிரம காம்பவுண்ட் சுவரை ஏறி தியோ குதிக்கும்போது. அருகில் ஒரு சிலந்தி விசித்திரமான ஒலியை எழுப்பியது. ஆனால் அதை தியோ சட்டை செய்யவில்லை.
பஸ்... பஸ்...
அது என்ன உலோக சத்தம்? இந்த சிலந்தி வலைக்கா பயப்படுவேன்! இதோ உள்ளே குதிக்கிறேன்!


இயோ உதாசினம் செய்துவிட்டு சென்ற அந்த சிலந்தி ஒரு தகவல் கருவி ஆகும். இயோ நுழைந்ததை அது தகவல் அனுப்பியது—
இந்த வீடு ஆளே இல்லாத மாதிரி இருக்கு. ஆனா என்னை ஒரு ஜோடி கண்கள் கண்காணிப்பதா எனக்கு உணர்வு ஏற்படுது!
பிளிப்...! கீழ் தளத்தில் உள்ள ஜன்னல் எண் ஆறு வழியாக வெளி ஆள் ஒருவன் நுழைகிறான். ..பிளிப்! பிளிப்!

உள்ளே நுழைந்ததும்—
எங்கு பார்த்தாலும் சிலந்தி வலை பின்னல்! நான் இருக்கும் இந்த அறைக் கதவுகள் தானாக பூட்டிக் கொள்கின்றனவே!

தியோ திகைத்தார். அவர் நுழைந்த அறை சிறிதாக சுருங்கியது. அதோடு மட்டும் அல்ல; அது நகரவும் தொடங்கியது.
இதென்ன பயங்கரம்? இது என்னை எங்கே கொண்டு போகிறது?
திடீர் என்று அந்த "அறை" பெட்டி ஆகி "லிப்ட்" மாதிரி, சரேல் என்று கீழே இறங்கியது.
நான் காண்பது கனவா? இல்லே, மாய மந்திரமா! ஐயோ என் வயிறு என்னவோ செய்கிறதே!
அந்த பிரமாண்டமான பங்களாவில் ஒரு அறையில் போய் அந்த பெட்டி நின்றது. அதன் கதவை தியோ திறந்ததும்—
வாலிபனே வா! என் பெயர் பேராசிரியர் புரு. எனது ரகசிய ஆராய்ச்சி கூடத்துக்கு வந்து இருக்கும் நீ யார்?
என் பெயர் தியோ. தனிப்பட்ட துப்பறிவாளன்.

சோதனைக் கூடத்தில் இருந்த பழம் பொருட்கள், ஆராய்ச்சி சாதனங்கள் ஆகிய வற்றை பார்த்து தியோ ஆச்சரியம் அடைந்தார்.
அந்தக் கிழ— நாயை, இளம் நாயாக மாற்றியது நீங்கதானா?
உன் போன்ற ஒரு இளம் துப்பறிவாளன் எனக்குத் தேவை!
என்னிடம் ஒரு காலக்—கருவி இருக்கு அது பின்நோக்கி இயங்கியபோது, அதில் நாய் அகப்பட்டு, இளம் நாயாகிவிட்டது.
என்ன! காலக்—கருவியா?
ஆமா. அது என் கண்டுபிடிப்பு. பல ஆண்டுகளுக்கு முன்னால் சரித்திர பேராசிரியராக நான் இருந்தேன். அப்போது, எகிப்து மன்னர் 2—ம் கிளியோப்சின்— பிணம் இருந்த மம்மி காணாமல் போன மர்மம் பற்றி— அறிந்தேன்.
அதில் துப்பு துலக்க— கால—கருவியை கண்டுபிடித்தேன். எனக்கு வயதாகிவிட்டது. நீ வாலிப— துப்பறிபவனாய் இருப்பதால், நீ கி. மு. 2600 ஆண்டுக்கு பின்நோக்கி போய், 2—ம் கிளியோப்சின் மம்மியை திருடியது யார் என்று கண்டுபிடி!
வித்தியாசமா துப்பறியவே விரும்புகிறேன். அதனால் நான் தயார்.


கடந்த காலத்தினுள் பயணம் செய்யக்கூடிய, பேராசிரியர் புருவின் அந்த காலக் கருவி, ஒரு மோட்டார் வேனில் அமைக்கப்பட்டு இருந்தது. அதில் 4 வகையான "கியர்கள்" இருந்தன. வேனில் தியோ அமர்ந்து ஒரு கியரை போட்டார். அது வேகமாக கடந்த காலத்தினுள் நுழைந்தது.
நான் வித்தியாசமான துப்பறியும் நிபுணன்தான். ஆனல் இந்த அளவு வித்தியாசமா இருப்பேன் என்று நினைக்கவில்லை!
C. Cridswell
CHIMNEY SWEEP

அப்பப்பா! இந்த கால கருவி மணிக்கு 10 நூற்றுண்டு வேகத்தில் கடந்த காலத்தில் போகுது!

கால கருவி நின்றதும்—
கி. மு. 2,600 ஆண்டுகளுக்கு முன் உள்ள காலத்துக்கு என்னை அனுப்புவதா பேராசிரியர் சொன்னார். அது இதுதானா?
எகிப்தில் மன்னர் இரண்டாவது கிளியோப்ஸ் அவர்கள் மரணம் அடைந்துவிட்டார். அவரது புனித-உடல் அடங்கிய மம்மி வந்து கொண்டு இருக்கிறது!
பேராசிரியர் குறிப்பிட்ட மம்மியை அதோ கொண்டு செல்கிறார்கள். அது எப்படி திருடப்படுகிறது என்று கண்டுபிடிக்கணும் அதற்காக மறைந்து மறைந்து பின்தொடர்கிறேன்!
மன்னரின் மம்மியை, அந்த பிரமிடு கோபுரத்தினுள் வைக்கப் போகிறார்கள். நான் இங்கே மறைந்துகொண்டால் பிறகு அது எப்படி திருடப்படுகிறது என்று கண்டுபிடிக்கலாம்!

கையில் சிறிய "டார்ச்" உடன்
டியோ மறைந்து இருந்தார்.
திடீர் என்று—
இந்த பிரமிடுக்குள் மறைந்து இருக்கும் நீ யார்?
இப்போ என்ன செய்ய?
என்ன அதிசயம்! இவர் விரல்களில் இருந்து வெளிச்சம் வருகிறதே!
2600 ஆண்டுகளுக்கு முந்திய மனிதன் நீ. உனக்கு டார்ச் விளக்கு பற்றி தெரியாது. ...ஓ! பயத்தில் மயங்கி விழுந்துவிட்டானே!
மரணம் அடைந்த எகிப்து மன்னர் இரண்டாம் கிளியோபப்ஸ் மம்மி, பிரமிடு உள் கொண்டு வரப்பட்டது.
மயக்கம் அடைந்த காவலாளி எழுந்துகொண்டால் என்ன செய்ய?
அதோ அங்கேதான் மன்னரை வைக்க வேண்டும்!

மாட்சிமை தங்கிய மாமன்னர், காலம் காலத்துக்கும் இங்கே சாந்தி அடையட்டும்!
இல்லையே! அவரை யாரோ திருடுவார்களே. நான் அதை கண்டுபிடிப்பேன்!


2-ம் கிளியோப்ஸ் மன்னரின் மம்மி வைக்கப்பட்ட இடத்தினுள் தியோ மெல்ல நுழைந்தார்.
மத குருக்கள், மன்னரின் மம்மியுடன் ஒரு ஆளை விட்டுப் போய் இருக்கிறார்கள். அவனிடம் சில கேள்விகளை கேட்கணும்!

அப்போது திடீர் என்று ஒரு கம்பி தடுக்கி விழ—
ஈட்டியை வீசுவது யார்? நல்லவேளை தப்பினேன்!

நீதான் கல்லறை திருடனா? உன்னைப் பிடிக்க வைத்த பொறியில் சிக்கிக் கொண்டாய்!
திருடனா? நானா? நான் தூய்மையான துப்பறிவாளன்!
நான் உன்னிடம் சில கேள்விகள் கேட்கிறேன். பதில் சொல். முதலில், இந்த மம்மியுடன் நீ என்ன செய்கிறாய்?
இறந்த மன்னரின் அடிமை நான். அவர் மம்மியை காலம் எல்லாம் காக்க என்னை இங்கே நிறுத்தி உள்ளனர்!
அ வது உன் வாழ்நாள் முழுவதும் நீ இங்கே இருப்பாய்.
நான் சீக்கிரம் இறந்துவிடுவேன். இந்த சமாதி கதவை பூட்டிவிட்டார்கள்.
தியோ, அடிமை இருவரும் உள்ளே இருக்க, கதவு பூட்டப்பட்டது

திடீர் என்று சுவர் பொத்துக்கொண்டு கற்கள் சிதறி விழுந்தன.
துப்பறியும் நிபுணரே! பயப்பட வேண்டாம். கல்லறைத் திருடர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் வாளுக்கு நாம் இருவரும் பலி ஆகும் நேரம் வந்து விட்டது!

தியோ ஒரு கணம் சிந்தித்தார்.
டேய் தியோ! துப்பறிய வந்து இப்படி பிரமிடு கல்லறைக்குள் அனாதையா சாகப்— போறியே! ஒரு துளி கண்ணீர் சிந்தக்— கூட உனக்கு இங்கே ஆள் இல்லே! அய்யகோ!
நான் ஏன் சாக வேண்டும். என்னிடம் மூளை இருக்கு! ஒரு சிங்கிள் ஐடியா பண்றேன்!


உடனே துப்பறியும் தியோ, அடிமையின் காதில் ஏதோ கிசுகிசுத்தார். பிறகு எகிப்து மன்னர் 2–ம் கிளியோப்சின் மம்மியின் பின்புறம் போய் பதுங்கினார். கல்லறைத் திருடர்கள் உள்ளே பாய்ந்து வந்தனர்.
இறந்தவர்களிடம் கொள்ளை அடிக்கும் கொடியவர்கள் வந்து விட்டனர்!
அய்யகோ! அவர்களை பார்க்கவே பயமா இருக்கே!

உம்! இறந்த மன்னர் உடலில் ஏகப்பட்ட ஆபரணங்களையும், அணிமணிகளையும் பூட்டி இருக்கிறார்கள். அத்தனையும் எடுங்கள்! இறந்த மன்னர் வெற்று உடம்பாய் தூங்கட்டும்!
முதலில் அடிமையை கொல்!

ஒரு திருடன் ஈட்டியை ஓங்கிய போது—
அடிமையே! இறந்த உன் மன்னருடன் சேர்ந்து— தூங்கு!
விசுவாசம் மிக்க அந்த அடிமையை கொல்ல விடமாட்டேன்!
திருடர்களை மடக்க இதோ வழி!
இதென்ன! மம்மி நகர்கிறதே!
கிரீச்! கிரீச்!
மம்மி பின்னால் இருந்த தியோ நகர்த்தினர். அது தெரியாத திருடர்கள்—
நம்மை தண்டிக்க மன்னர் உயிர் பெற்று விட்டார்.

உம், ஒடுங்க!
துப்பறியும் நிபுணரே! உங்க கை மந்திரம் போட்-டதா?
இல்லே! கை தசைகளால் மம்மியை நகர்த்தினேன்.
பெரிய அபாயத்தில் இருந்து தப்பிய அடிமை, தியோவின் காலில் விழுந்தான்.
பிரபு! என் உயிரை காத்தீர்கள்! இனி நான் உங்கள் அடிமை! தாசானுதாசன்! என் பெயர் அடி பென்!
பென்! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.
அடிமை அடி பென், அதற்கு சம்மதித்தான்.
வரலாற்றை என்னால் மாற்ற முடியாது. அதனால் அந்த திருடர்கள் மீண்டும் வருவார்கள்!
மம்மி மீது அவர்கள் கை வைக்காமல் இருக்க ஒரே வழி அதை 20-ம் நூற்றாண்டுக்கு கொண்டு போவதுதான்!

உடம், ஒடுங்க!
துப்பறியும் நிபுணரே! உங்க கை மந்திரம் போட்-டதா?
இல்லே! கை தசைகளால் மம்மியை நகர்த்தினேன்.
பெரிய அபாயத்தில் இருந்து தப்பிய அடிமை, தியோவின் காலில் விழுந்தான்.
பிரபு! என் உயிரை காத்தீர்கள்! இனி நான் உங்கள் அடிமை! தாசானுதாசன்! என் பெயர் அடி பென்!
பென்! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.
அடிமை அடி பென், அதற்கு சம்மதித்தான்.
வரலாற்றை என்னால் மாற்ற முடியாது. அதனால் அந்த திருடர்கள் மீண்டும் வருவார்கள்!
மம்மி மீது அவர்கள் கை வைக்காமல் இருக்க ஒரே வழி அதை 20-ம் நூற்றாண்டுக்கு கொண்டு போவதுதான்!

பிரமிடு கோபுரத்தினுள் மன்னரின் மம்மியை இருவரும் தூக்கிச் — சென்றனர்.
சீக்கிரம்! எனக்கு பயமா இருக்கு!
இங்கு பேய் இருப்பதா— நினைத்து நடுங்க வேண்டாம்!
காலக் கருவி உள்ள வேனில் மன்னரின் சவப் பெட்டி ஏற்றப்பட்டது.
நான் சரியான காரியத்தைச்— செய்வதா நினைக்கிறேன்.
தியோ முன்புறம் ஏறி அமர்ந்ததும்—
நாலாவது கியர் எங்கே? இதோ இருக்கு! ஏய் பென்! நீ என்னுடன் வர முடி- யாது!
மன்னர் இருக்கும் இடத்தில்தான் நான் இருப்பேன்!


காலக் கருவி, வான வெளி, நிகழ் காலம் இவற்றில் பயணம் செய்வதற்கு — பதிலாக—
ஐயோ! கியர்களை மாற்றி போட்டுவிட்டேன்! அதனல் இந்த வேன் மீண்டும் கடந்த காலத்துக்கு போகுது!


மரச் சட்டங்கள் நெரிபட ஒரு இடத்தில் வந்து அது நின்றது.
பிரேக் எங்கே? அதை மிதிக்—கிறேன்!

கியர் குளறுபடியால், மீண்டும் 2600 ஆண்டுக்கு முந்திய எகிப்தில் மாட்டிக் கொண்டேன்!


தியோ, தவறான கியரை போட்டதால் 20-ம் நூற்றுண்டுக்கு வரவேண்டிய காலக் கருவி வேன், மீண்டும் கடந்த கால எகிப்துக்குப் போய் நைல் நதியில் ஒரு படகில் போய் நின்றது!
ஏய்! அது என்ன? வித்தியாசமான ரதம் நம் படகில் வந்து நிற்குதே!
பென்! இந்த படகுகாரர்கள், நம்மிடம் சண்டைக்கு வருவார்களோ!

மம்மி அருகில் இருந்த — அடிமை! அடுத்தவன் யார்?
எப்படியோ 2-ம் கிளியோப்சின் மம்மி நம் கையில் சிக்கிவிட்டது!
என்ன! இந்தப்— படகுகாரர்கள், கல்லறை திருடர்களா? அய்யகோ, என் செய்வேன்?

ஒரு இடத்தில் படகு கரை சேர—
அதோ நம் தலைவர்! உங்கள் கட்டளைப்படி, இறந்த மாமன்னரின் உடலை இதோ கொண்டு வந்துவிட்டோம்!
நல்லது! இறந்த மன்னரின் உடல், நான் எகிப்திய அரியாசனத்தில் அமரவும், மன்னராக முடி சூடவும் பயன்படும்!
நாளை காலை, எனது புரட்சிப் படைகள், மன்னர் கிளியோப்ரின் மகன் படையை சந்திக்கும். ஆனால் என் ரதத்தில் இறந்த மன்னரின் சடலத்தை பார்த்ததும், அரசு படைகள் பயத்தில் சிதறிவிடும். எகிப்து என் வசமாகும்!
தியோவும் அடிமையும் இரவு முழுவதும் பெயிண்ட் அடித்தனர்.
பென்! இவர்களிடம் இருந்து எப்படி தப்பிப்பது?
மம்மி மீது ஒளி விடும் கலவையை பூசிவிட்டீர்களா? எதிரி படையினர் பார்த்தால் ஏதோ தேவலோக தரிசனம் போல் தெரிய வேண்டும்.

பிரகாசிக்கும் கலவையை மம்மி மீது பூசும் வேலை முடிந்ததும்—
பிரபு! உங்க கை ஏன் நடுங்குது? பயத்தில் கலவை கூஜாவை கிழே போட்டு விட்டீர்களே!
எனக்கு பயம் ஒரு பக்கம்! எப்படி தப்பிப்பது என்ற யோசனை ஒரு பக்கம்!
அதிகாலையில்—
புதிய ஆட்களின் ரதத்தை போர்முனைக்கு இழுத்து போ!
இந்த திருட்டுக்— கொள்ளையர், ஆட்சியை பிடிக்க நம்மை பயன்படுத்துகிறார்களே! அய்யகோ!
துப்பறியும் இயோவை, அந்தக்காலத்திய எகிப்திய கொள்ளையர் சோதனை போட்டனர்.
இவனைக்— கொல்லும் முன் உடைமைகளை பறி.
அது சிகரெட்டு லைட்டர். அதைப் பற்றி சொன்னால் உங்களுக்குப் புரியாது. அதை தீயில் போட்டுப்— பார்!
என்ன இது?
பல நூற்றாண்டுகளுக்கு முந்திய, அந்த எகிப்தியர்களுக்கு சிகரெட்டு லைட்டர் பற்றி தெரியவில்லை. அதில் பெட்ரோல் இருப்பது தெரியாமல் தீயில் போட அது வெடித்தது.
எப்படி என் ஐடியா?
என்ன இது! தீயில் விழுந்ததும் வெடிக்குதே!
பிரபு ஓடி வாங்க!

பிரபு, திருடர்களிடம் இருந்து தப்பி வந்து விட்டோம்!
வேனில் நான் கை தவறி விட்ட பெயிண்ட் ஜாடியில் இருந்து பெயிண்ட் சிந்தி உள்ளது. அதன் மூலம் வேன் போன தடம் தெரியுது! வா!
தியோவும் பென்னும் நெடுந்தூரம் போன பின்—
அதோ என் வேன்!
மறைந்த அரசர் மகனின் படைகளும், கலகத் தலைவன் படைகளும் மோத தயார் ஆகுது!
கோரஸ் கடவுளே! உண்மை வாரிசான எனக்கு வெற்றி கிட்டட்டும்!
போர்! போர்!

பிரகாச பெயிண்ட் பூசப்பட்ட மன்னரின் மம்மி பெட்டி, புரட்சி படைத்-தலைவரின் ரதத்தில் ஏற்றப்பட்டது.
என் படைகளை வழி நடத்த, இறந்த மன்னர் உயிர் பெற்று வந்து இருப்பதைப் பார்த்து இளவரசனின் படைகள் ஓடப் போகின்றன!


ஆ! இதென்ன!
எதிரி படைகளை இறந்த மன்னர் வழி நடத்துகிறார்.
ஆபத்து ஓடுங்க!

என்ன நடக்கிறது என்று தியோ கவனித்தார். படைகள் சிதறுவதைப் பார்த்த இளவரசன்—
அது ஒரு ஏமாற்று வித்தை! ஓடாதீர்கள்! சண்டை போடுங்க!
போரைப் பற்றி எனக்கு கவலை இல்லை. நான் எப்படியும் மம்மியை கைப்பற்ற வேண்டும்.

இளவரசர் படையில் குழப்பம் ஏற்பட்டதால், கலகத் தலைவனின் கை ஓங்கியது.
மம்மியை பார்த்த அரசு படைகள் பயந்து ஓடுகின்றனவே! வெற்றி எனக்கே!
பென் ஓடியா! எப்படியாவது மம்மியை கைப்பற்றணும்!
வேனில் ஏறி ஓட்டிச் செல்வோம்!
யார் இந்த அன்னிய ஆசாமி?
தியோவைப் பார்த்து கலகப்-படை வீரர்கள் நகைக்க—

மின்னல் வேகத்தில் போய் மம்மியை தூக்கணும்.
அங்கே பார் குதிரை இல்லாமல் அந்த ரதம் எப்படி ஓடும்?
இது ஓட குதிரை தேவை இல்லை. குதிரை சக்தி போதும் என்பது இவர்களுக்கு தெரியாது!
அட கடவுளே! அது தானு ஓடுதே!
இளவரசன் கைது செய்யப்பட—
இளவரசனை கொல்லுங்க! என்னை அரசன் ஆக்குங்க!
தலைவரே! அதோ ஒரு ரதம்! காற்றில் பறந்து வருது!
அடுத்த விநாடி வேகமாக வந்த வேன், புரட்சி தலைவன் ரதத்தில் இடித்து விட்டு நின்றது.
சரியா மோதினேன்! பென் என்னை பாராட்டு!
ஐயோ! என் ரதம்! ஆ!

கலகத் தலைவன் கீழே விழ, வேன் மீது மம்மி சரிந்தது.
இறந்த மன்னர் நம் தலைவரை விட்டுவிட்டு, அந்த புதிய ஆளுடன் சேர்ந்துவிட்டார்!
பென்! அதிர்ஷ்டம் நம் பக்கம்தான்! இனி இளவரசனை மீட்டு வா!
தியோவிடம் மன்னரின் மகன்—
மரணத்தில் இருந்து என்னை மீட்ட நீங்கள் யார்?
இளவரசே! அதை பிறகு சொல்கிறேன்! இப்போ இதில் ஏறுங்க!
புழுதியை அள்ளி வீசியபடி வேன் புறப்பட, கலகத் தலைவன் கூறினான்—
அந்த நூதன ரதத்தை பிடியுங்க!
நம் கண்களை குருடாக்க சக்கரத்தில் இருந்து மண் வீசுறாங்க.
விடாதிங்க! அவனைப் பிடியுங்க!
பென்! கலகப் படையில் உள்ள கல்லறைத் திருடர்கள் துரத்துகிறார்கள்!

எ.ம-4

கல்லறை திருடர்கள் குமுறினர்.
அந்த அன்னியன், மன்னர் மம்மியை எடுத்துக்கொண்டதால், நான் அரசனாவது தடைபட்டு விட்டது.
ரதத்தில் ஏறுங்க! அவனை பிடிப்போம்!
மணலால் வேனின் வேகம் பாதிக்க—
கொள்ளையர் நெருங்கி விட்டனர்!
ஒரு பெரிய கட்டிடம் இருக்கு. அதனுள் போவோம்!
வேன், ஒரு பிரமாண்ட கட்டிடத்தினுள் நுழைந்தது.
கொள்ளையர் கண்களில் இருந்து தப்ப முடியுமா?
நண்பர் தியோ! மறைவதற்கு தவறான இடத்தை தேர்ந்து எடுத்துவிட்டார்கள்!

புதிய நண்பரே! என்னை மன்னர் ஆக்கிவிட்டீர். உங்களுக்கு பரிசு கொடுக்க— வேண்டும்!
மன்னரின் மம்மியை, பத்திரமான ஒரு இடத்தில் புதையுங்க. அதுதான் எனக்கு நீங்க அளிக்கும் பரிசு!
அன்று இரவு—
இந்த விளையாட்டு அரங்கத்தில் இதை புதைப்பதால், இது பாதுகாப்பா இருக்கும்.
இனி நான் 20–ம் நூற்றாண்டுக்கு திரும்பி, என்ன நடந்தது என்று பேராசிரியர் புருவிடம் விளக்குவேன்.
பிறகு நாலாவது கியரை போட்டு தியோ, காலக்—கருவி வேனை வேக வேகமாக. 20–ம் நூற்றாண்டுக்கு செலுத்தினார்.
உம்...என்ன வேகம்! 15–ம் நூற்றாண்டு! 16, 17, 18 ஆகா! 19–ம் நூற்றாண்டு! இதோ 20–ம் நூற்றாண்டு!

ரகசிய சோதனைக்— கூடத்தில் இருந்த பேராசிரியர் புருவை, தியோ சந்தித்தார்.
தியோ! மன்னரின் மம்மி புதைக்கப்பட்டு உள்ள இடத்தை கண்டுபிடித்துவிட்டாய்! வா, எகிப்து போய் அதை தோண்டி எடுப்போம்!
அந்த மம்மி 4600 ஆண்டுகளாக பத்திரமா இருக்குமா?
மறுநாள்—
பேராசிரியர் அவர்களே! அன்றைய எகிப்து இன்று ரொம்ப மாறிவிட்டது!
மம்மி புதைக்கப்பட்ட இடத்தை காட்டும் படத்தை இளவரசர் என்னிடம் கொடுத்தார்.
அதை வைத்து மம்மி புதைக்கப்பட்டு உள்ள இடத்தை தேடினர்.
புதைத்த இடம் விளையாட்டு அரங்கம் ஆச்சே!
உம்... மம்மி அதோ அந்த இடத்தில்தான் புதைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

முன்பு வீர விளையாட்டு நடந்த இடம், இப்போ கால்பந்து மைதானம்!
கோல் கம்பங்கள் இடையே மம்மி தோண்டி எடுக்கப்பட்டது.
இதனால்தான், இந்த பக்கம் கோலே விழுவது இல்லே!
மன்னரின் ஆவி கோல் விழுவதை தடுத்து இருக்கு!
அந்த பந்தய மைதான அதிகாரிகள் தியோவையும், புருவையும் பாராட்டினர். ஆனால்—
வீரர்களே! இந்த இருவரும் நம் அணியின் அதிர்ஷ்டத்தை பறித்துவிட்டனர்.
இவர்களை கல்லால் அடியுங்க!
காணாமல் போன மம்மியை கண்டுபிடித்த நமக்கு கல் அடி!
பிறகு அவர்கள் அவசரம் அவசரமாக லண்டன் திரும்பினார்கள்.
சார்! நான் வரட்டுமா?
தியோ! அமெரிக்காவில் சிகாகோ நகரில் நீ கண்டுபிடிக்க வேண்டிய ஒரு "கேஸ்" இருக்கு.
முற்றும்

தொடர் கொலை!

சித்ரா மணவன்

20. எச்சரிக்கை

கல்யாண், நண்பர்களுடன் ராணிமங்கலம் போலீஸ் நிலையத்துக்குள் நுழைந்தான்.

''வாய்யா, கல்யாண் உட்கார்!''—சப்-இன்ஸ்பெக்டர் சாரா மூவரும் அமர்ந்தனர். கண் புருவங்களை நெருங்கிக் கொண்ட சப்-இன்ஸ்பெக்டர், கல்யாணை நோக்கி ''ஏதாவது விஷயம் உண்டா? ஏதாவுது கண்டு பிடித்தீர்களா?'' என்று கேட்டார்.

''சார்! நாங்கள் சந்தேகப்பட்டது சரியாகப் போய் விட்டது! பச்சாபாயின் ஆட்கள்தான், சமாதி நிலவறைக்குள் சுரங்கம் அடித்து நுழைந்து தங்கத் தாயத்தை திருடி இருக்கிறார்கள்!'' என்றான் கல்யாண்.

''சரி! அப்புறம்?''

''அந்த தங்கத் தாயத்துக்குள் ஒரு சிறிய செப்பு தகடு சுருள் இருந்து இருக்கு. மகாராஜா வேடப்ப உடையாரின் மூதாதையர் ஒருவர் அதை பட்டயமாக எழுதி வைத்து இருக்கிறார். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பு உள்ள தங்க, வைர நகைகளை புதைத்து வைத்து இருப்பதாக, வட்டெழுத்துக்களில் எழுதப்பட்டு இருக்கு?''

''அதை புதைத்து வைத்து இருக்கும் இடம் எது?''—சப்-இன்ஸ்பெக்டர் ஆர்வமாக கேட்டார்.

''அது எங்கே புதைத்து வைக்கப்பட்டுள்ளது என்ற ரகசியம் தங்கச் செங்கோலுக்குள் அடைக்கப்பட்டு உள்ளதாம்?''

சப்-இன்ஸ்பெக்டர் பதில் சொல்லாமல், கல்யாண் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

கல்யாண் தொடர்ந்தான்——

''சப்-இன்ஸ்பெக்டர், சார்! தங்கச் செங்கோல் அரண்மனையில், புனிதாவின் நேரடிப் பாதுகாப்பில் உள்ளது. புனிதா இப்போது

சென்னை போய் இருக்கிறாள். அவள் வந்ததும் விஷயத்தைச் சொல்லி,
தங்கச் செங்கோலுக்குள் இருக்கும் செப்புப் பட்டயத்தை எடுத்து
பிரித்து பார்த்து அரண்மனை பரம்பரை பொக்கிஷம் புதைந்து
கிடக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டுவிடலாம். பிறகு அந்த
செப்புப்பட்டயத்தை செங்கோலுக்குள் மீண்டும் அடைத்து வைத்து
விட வேண்டும். செங்கோலுக்குள்தான் புதையல் ரகசியம் உள்ளது
என்பதை அறிந்து விட்ட பச்சாபாயின் ஆட்கள் நிச்சயம் செங்கோலை
திருட வருவார்கள். அப்போது அவர்களை பிடித்து விடலாம். அல்லது
அவர்களை செங்கோலைத் திருட விட்டு விட்டு, அவர்கள் புதையலை
தோண்டி எடுக்கும்போது கையும் களவுமாக பிடித்து விடலாம்!''

சப்-இன்ஸ்பெக்டர் உறைந்து போய் உட்கார்ந்து இருந்தார்.
பிறகு எழுந்து கொண்டு அங்கும் இங்கும் நடந்தார். ''என்ன
செய்யலாம்?'' என்று அவர் யோசிப்பதை கல்யாணும் நண்பர்களும்
யூகித்தார்கள்.

ஐந்து நிமிட மவுனத்திற்கு பிறகு கல்யாண், ''சார்! எங்கள் மீது
அரண்மனைக்குள் அத்து மீறி நுழைந்து; அரண்மனை காவலாளியைக்
கொன்றது என்று பல வழக்குகளை பதிவு செய்து இருக்கிறீர்கள்.
நாங்கள் நிரபராதிகள். அந்த வழக்குகளை தள்ளி விடுங்கள்'' என்று
கேட்டுக்கொண்டான்.

சப்-இன்ஸ்பெக்டர், தன் இருக்கையில் அமர்ந்தார். ''கல்யாண்
பெரிய கடத்தல் வழக்கில் உன்னை மாட்ட சி.பி.ஐ. அதிகாரி விஜய்,
ஆதாரம் தேடிக்கொண்டு இருக்கிறார். அவர் அனுமதி இல்லாமலும்,
மேல் அதிகாரியின் உத்தரவு இல்லாமலும் நான் ஒன்றும் செய்ய
முடியாது. நான் உன்னையும் உன் நண்பர்களையும் நம்புகிறேன்.
அதனால்தான் என் சொந்த பொறுப்பில் உங்கள் மூவரையும் ஜாமீனில்
வெளியே விட்டு இருக்கிறேன். அரண்மனையில் ஏற்பட்டு உள்ள
இந்தப் பிரச்சினை தீரட்டும். பிறகு என்னால் முடிந்த உதவியை
செய்கிறேன். இப்போது கல்யாண், நீ அரண்மனைக்கு போ. புனிதா
வை நீ தனியாக சென்னைக்கு விட்டது தவறு. இதன் மூலம் நம்
நோக்கமும் திட்டமும் நிறைவேறாமல் போகலாம்...''

சப்-இன்ஸ்பெக்டர் முடிப்பதற்குள், ''சார்! புனிதா என்னை ஏமாற்றி
வழியில் இறக்கி விட்டு போய் விட்டாள்'' என்றான்.

''ஆல்ரைட்! ஆல்ரைட்! நீ எப்படியாவது சமாளித்தால்தான் இந்த
பெரிய பிரச்சினையில் நாம் வெற்றி பெற முடியும்!''

பிறகு கல்யாண் அரண்மனைக்கு புறப்பட்டான்.

பச்சாபாயின் பங்களாவை கண்காணிக்கும்படி பாட்சா, பட்டேல்
இருவரும் சப்-இன்ஸ்பெக்டர் அனுப்பி வைத்தார்.

* * * *

மாலை நேர போக்கு வரத்து நெரிசலை சமாளித்து, புனிதா,

காரை ஸ்பென்சர் காம்பவுண்டுக்குள் திரும்பினுள்.

ஒரு ஓரமாக கிடைத்த இடத்தில் காரை நிறுத்தினுள்.

அதற்குள் கதவைத் திறந்து நந்தன் வெளியே குதித்தான்.

புனிதா கைப்பையை எடுத்துக் கொண்டு, கார் கதவை பூட்டினுள்.

இருவரும் நடந்தார்கள்.

கடற்காற்றை அங்கேகூட அவர்களால் உணர முடிந்தது.

இருவரும் மகிழ்ச்சியாக காணப்பட்டார்கள்.

கடைவாசலில் நுழையும்போது ''அக்கா! ஐஸ் கிரீம் வாங்கிக்கொடு அக்கா!'' என்று வராந்தாவில் இருந்த ஐஸ்கிரீம் கடையைக் காட்டினுன், நந்தன்.

அதுவரை புன்னகை பூத்திருந்த புனிதா முகத்தில், கண்டிப்பின் ரேகைகள் கோடிட்டன. ''நந்தா! நீ இளவரசன். பெரிய இடத்துப் பிள்ளை. இப்படி வராந்தாவில் நின்று ஐஸ்கிரீம் சாப்பிடுவதை நான் அனுமதிக்க மாட்டேன். ஷாப்பிங் முடிந்ததும், ''பியாஸ்டா''வுக்கு போய் வேண்டியதை சாப்பிடலாம்!'' என்று ஆங்கிலத்தில் கிசுகிசுத்து விட்டு, கம்பீரமாக உள்ளே நுழைந்தாள். அவள் பார்வை அழகுப் பொருட்கள் விற்கும் கடையில் பதிந்தது.

''வவ்வவ்வ'' என்று மெல்ல வலிப்பு காட்டிய நந்தன், மெள்ள புனிதாவுக்குத் தெரியாமல் வராந்தாவுக்கு வந்தான்.

வலது கையில் ஒன்றும் இடது கையில் ஒன்றுமாக இரண்டு ஐஸ்கிரீம்களை வாங்கி சுவைத்து சாப்பிட்டான்.

அப்போது ஸ்பென்சர் காம்பவுண்டுக்குள் கறுப்பு கண்ணுடியால் மூடப்பட்ட ஒரு கறுப்பு அம்பாசிடர் கார் நுழைந்தது. அதனுள் கன்னுவும் பாசீனும் இருந்தனர்.

அழகிய வேலைப்பாடு அமைந்த அலங்கார பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டு இருப்பதை ஒவ்வொன்ருக புனிதா பார்த்தாள். சிலவற்றை வாங்கினுள்.

அந்தக் கடையிலேயே அரைமணி நேரம் கழிந்து விட்டதை அவளால் உணர முடியவில்லை.

அந்தக் கடையை விட்டு விலகி, வகை வகையான பர்னிச்சர்கள் போடப்பட்டு இருந்த விசாலமான ஹாலில் அவள் ஒயிலாக நடக்கும் போது, திடீர் என்று அவள் இதயம் தடக் என்றது.

நந்தன் எங்கே?

பின்னுலே வந்து கொண்டு இருக்கிருன் என்று நினைத்த நந்தன் எங்கே?

அவள் முகத்தில் கவலை அப்பியது.

திடுக்கிட்டு திரும்பி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

காணவில்லை.

அந்த வழியே வேகமாக வந்து, வராந்தாவை அடைந்தாள்.

ஐஸ்கிரீம் கடையை நோக்கினுள். அங்கே இல்லை.

''பியாஸ்டா'' ஓட்டலில் சாப்பிடலாம் என்று அவள் சொன்னதன் பேரில் அங்கே போய் விட்டானோ?

துடிக்கும் இதயத்துடன் அங்கே போய் பார்த்தாள் இல்லே. நந்தன் அங்கே இல்லே.

ஒருவேளே செல்லக்கோபத்தில் காருக்குப்போய் இருப்பானு? கார் சாவி அவளிடம் அல்லவா இருக்கிறது?

எதற்கும் காருக்குப்போய் பார்ப்போம், என்று கார் நிற்கும் இடத்துக்கு விரைந்தாள்.

கார் கதவுகளே அடைத்தே இருந்தன.

வாங்கிய சாமான்களே காரில்வைத்துவிட்டு தேடுவோம், என்று நினேத்து, சாவியை எடுத்து கதவைத்திறக்கையில்——

கார் கதவு இடுக்கில் ஒருதாள் சொருகிவைக்கப்பட்டு இருப்பதை பார்த்து——

நடுங்கும் கரத்துடன் அதை எடுத்து படித்தாள்!

தாளில் ஆங்கிலத்தில் அந்தக்குறிப்பு "டைப்" செய்யப்பட்டு இருந்தது.

"புனி ா மேடம்!

இளா ரசன் நந்தன்உடையாரை நாங்கள் கடத்திச்செல்கிறோம்

ஏன் கடத்தி செல்கிறோம்? அவனே மீட்க நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விவரங்கள் பின்னுல் உங்களுக்கு தெரிவிக்கப்படும் மேடம்!

நீங்கள் படித்தவர்கள், புத்திசாலி. இதுபற்றி போலீசுக்கோ, மற்றவர் களிடமோ சொன்னீர்கள் என்றுல், ராணிமங்கலம் அரண்மனே தனக்கு இருந்த ஒரே வாரிசையும் இழந்துவிடும்!

எச்சரிக்கிறோம்! எச்சரிக்கிறோம்!

பதருமல் அரண்மனேபோய் சேறுங்கள்!"

அந்த துண்டு காகிதத்தில் இருந்ததற்கு மாருக அவள் பதறினுள். கைகால்கள் நடுங்கின. உடல் முழுவதும் வியர்த்தது.

"நந்து! மைடீயர் நந்து!"— அவள் மனதுக்குள் அழுதாள்.

காரில் ஏறினுள். ராணிமங்கலம் நோக்கி புறப்பட்டாள்.

இதுவரை கண்டறியாத பயம், மருட்சி அவளிடம் ஏற்பட்டது.

"கல்யாணே, வழியில் இறக்கிவிட்டது எவ்வளவு தப்பாகிவிட்டது!" என்று அவள் உருகினுள்.

இனி என்ன செய்வது என்று அவள் திகைத்தாள்.

கார், பயங்கர வேகத்தில் ராணிமங்கலத்தை நோக்கிப்பறந்தது.

(இந்தக் கதையின் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்.)

துப்பறியும் நிபுணர்
ராயன்
துப்பு துலக்கும்
மயக்க ஊசி!
அழகிப் போட்டி
இங்கிலாந்து அழகியாக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள மிஸ் சான்ட்ராவுக்கு ஒரு லட்சம் டாலரை பரிசாக வழங்குகிறோம்.
நன்றி மேயர் சார்!
மிஸ்! அப்படியே நில்லுங்க!
இன்னும் ஒரு போட்டோ!
மிஸ்! நீங்க என்ன தொழில் செய்றீங்க?
ஒரு கல்லூரியில் ஆசிரியை

தொடர்ந்து அதே தொழில் செய்வீர்களா?
இல்லை. பழம் பொருட்கள் விற்கும் கடை நடத்தப்-போகி-றேன்.
பழம் பொருட்களை சேகரிப்பது தான் என் பொழுது போக்கு. அதை நான் அதிகம் நேசிப்பதால், அந்த தொழிலை செய்யப்-போகிறேன்.
உங்கள் பெற்றோர்கள் யார்?
ஆண் நண்பர்கள் உண்டா?
பெற்றோர் இல்லை. ஆண் நண்பர்கள் கிடையாது.
அடுத்த வாரம்—
மிஸ் சான்ட்ரா! பழம் பொருட்களை விற்கும் இந்தக் கடையை உங்களுக்கு விற்க நான் தயார்!
இந்த வீடு மாடியில் வசித்துக் கொண்டு, கீழே கடை நடத்த வசதியா இருக்கு.
உங்களுக்கு பிடித்து இருந்தால், இதை வாங்கி நடத்துங்க!
மறு வாரம் மிஸ் சான்ட்ரா! பழம்-பொருட்களை விற்கும் அந்த கடையை வாங்கி நடத்த ஆரம்பித்தாள்.

அதற்கு அடுத்த வாரம் பாரீஸ் நகரில் ஒருவர் ஒரு வார பத்திரிகையை பார்த்தார்.
மிஸ் சான்ட்ரா! அழகிப்-போட்டியில் ஒரு லட்சம் டாலர் பரிசாம்! தனியா கடை நடத்துகிருளாம்!
WEEKLY PHOTOMAG
அப்படி என்ன படிக்கிருய்?
நண்பா! நாம் கொஞ்ச நாள் இடம் மாறினுல் என்ன?
மாந்திரீக மந்திரசாலை.
மாந்திரீக ஆலோசனை, தபால் மூலம் பயிற்சி இவற்றை கொஞ்ச காலம் நிறுத்தவா?
டாக்டர்! இங்கிலாந்தில் ஒரு லட்சம் டாலர் பரிசு பெற்ற ஒரு பெண் தனியா வாழ்-கிருள்!
அப்படி என்ருல் அவளை கவனிக்கலாம்.
இதோ பாருங்க அவள் போட்டோ!
இவள் முகத்தைப்-பார்த்த நினைவு இருக்கே!
பெட்ரோ! மிஸ் சான்ட்ராவின் இந்த போட்டோ, யாரையோ நினைவு படுத்துது.
நாம் பிடித்து வைத்திருக்கும் பெண் போல இருக்கு டாக்டர்!
AU PETIT MOKA

அந்தப் பெண்ணை பார்ப்போம்.
சரி!
டாக்டர் சரி தானே!
ஆமா.
முடியை பின்னல் வாரி விட்டால் ஒற்றுமை அதிகமா இருக்கு!
பெட்ரோ! இந்த பணக்கார பெண்மீது நீங்க திடீர் அக்கறை காட்ட காரணம்?
அவளுக்கு இப்போ ஒரு லட்சம் டாலர் கிடைச்சு இருக்கு!
அவளுக்கு பெற்றோர் கிடையாது. சுஸ்செக்- பகுதியில் ஒரு கிராமத்தில் பழம் பொருட்கள் விற்கும் கடை நடத்துகிறாள்.
இங்கே வந்து உட்கார்.

இப்போ இவள் எப்படி இருக்கிறாள் டாக்டர்?
அந்த பணக்காரி மாதிரியே இருக்கா!
என் ஊசியுடன் சேர்ந்து உன் மேக்கப் வேலை இவளை மிஸ் சான்ட்ரா! ஆக்கும்!
உன் பெயர் இனி சான்ட்ரா சொல்...!
SNAP
சான்ட்ரா! சான்ட்ரா!
நல்லா கீழ்படியுது, பெட்ரோ!
பெட்ரோ! சான்ட்ராவிடம் இருக்கும் பணத்தை எப்படி பறிப்பது?
முதலில் அவளை இங்கே கொண்டு வருவோம்!
பெக்கர்! அந்த பணக்காரி மிஸ் சான்ட்ரா கடையை கண்காணி!
இதோ போகிறேன்.
கடையுடன் கூடிய வீட்டில் சான்ட்ரா, தன் நண்பர் ஜோவுக்கு கடிதம் எழுதினாள்.
இங்கே வந்து, என்னை சந்தியுங்கள்
5
Antiques
ANTIQUES

கடிதத்தை தபால் பெட்டியில் போடு--கிறேன்.
சில நிமிடங்கள் கழித்து சான்ட்ரா வீடு திரும்பிய போது—
யார் அது?
வணக்கம் மேடம்!
உங்க பெயர்தானே மிஸ் சான்ட்ரா?
நான் கடையை மூடப் போகிறேன்!
கடையை நாங்களே மூடுகிறோம். நாங்கள்தான் இன்றைய கடைசி வாடிக்கை ஆட்கள்!
கிளிக்.
நீங்க மூடத்-தேவை இல்லை!
சான்ட்ரா! வீண் சத்தம் போடாதே!
ஏய்! என்னை பிடிக்காதே!
டாக்டர் சீக்கிரம்!

வீணா திமிறி சங்கடப்-படாதே!
டாக்டர்! மயங்கி விட்டாள்!
அதிர்ச்சி அவளுக்கு. ஊசி போடுகிறேன்!
கீழே படுக்க வை! ஜன்னல் வழியா வெளியே தெரியக்-கூடாது!
அவள் துணிமணிகளை பெட்டியில் வை. நான் அவள் பாங்கி செக் புத்தகத்தை தேடி எடுக்கிறேன்
சிறிய தட்டெழுத் எந்திரத்தை அவள் பயன்படுத்-துகிறாள்.
5
ntiqu
இனி, பெக்கரிடம் போய், நம் காரைக்-கொண்டு-வரச்சொல்!
சான்ட்ரா என்னை வரச்-சொல்லி கடிதம் போட்டு இருந்தாள். இங்கே அவளை காணவில்லையே!

சில நாட்களாகவே அவள் இங்கே இல்லே போலிருக்கே!
துப்பறியும் நிபுணர் ராயஞ! நான் உங்க நண்பன் ஜோ பேசறேன். இங்கே என் கல்லூரி சகா சான்ட்ரா வரச்-சொன்ஞள். வந்து பார்த்தால் அவளேக்-காணேம்!
ஏதாவது சந்தேகமா இருக்கா?
ஆமா, மிஸ்டர் ராயன்! அவளுக்கு சமீபத்தில் அழகு போட்டியில் ஒரு லட்சம் டாலர் பரிசு கிடைச்சுது. பத்திரிகை--களில் செய்தியும் வந்தது.
சரி! புறப்படு-கிறேன். ஓட்டலில் ரூம் போட்டு வையுங்க!
ராயன்! நீங்க உடனே வந்ததற்கு நன்றி!
சான்ட்ரா பற்றி ஏதாவது தகவல் உண்டா?
இங்கே அக்கம் பக்கத்தில் விசாரித்தேன் ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லே!
உங்களே வரச் சொன்னதை அவள் மறந்து-இருப்பாளோ?
அப்படிப்பட்ட பெண் அல்ல. இதில் மர்மம் இருக்கு!

அப்படி என்ருல் கதவை உடைப்போம்.
ஆபத்துக்கு பாவம் இல்லே!
GEORGE HOTEL
பூட்டை லாவகமாக திறக்க– எங்கே கற்றீர்கள்?
துப்பறியும் வேலேக்கு வந்த பின் இது சகஜம் ஆகி விட்டது.
இதோ, சான்ட்ராவுக்கு நான் எழுதிய கடிதம்.
ஒரு நாளேக்கு 1 பாட்டில் வீதம் வைத்துப் பார்த்தால் 8 நாட்களுக்கு முன் அவள் காணுமல் போய் இருக்கிருள்.
8 நாட்களுக்கு முன்தான் எனக்கு அவள் கடிதம் எழுதியது!
மாடி அறையை பார்ப்போம்!
ராயன்! முதலில் நீங்க போங்க!
ராயன்! எங்கே இருக்-கீங்க!
இங்கே வாங்க! கொலே ஒன்றும் நடக்கவில்லே!

இங்கே உள்ள இந்த தரை விரிப்பில், ஒரு ஆணின் ஷூ தடம் தெரியுது! இது முதல் துப்பு!
இங்கே இன்னொரு தடம்! அதைவிட சிறியது.
உள்ளே யார் அது?
ராயன்! கூப்பிடுவது யார்?
நான் போலீஸ்காரர் பிரவுன். சான்ட்ரா கடை பூட்டு திறந்து இருக்கு.
சான்ட்ரா இங்கு இல்லை. நாங்க சந்தேகம் கொள்கிறேம்!
நீங்க யார். இங்க என்ன வேலை?
என் பெயர் ஜோ. இது என் நண்பன் ராயன். துப்பறியும் நிபுணர்.
மிஸ்டர் பிரவுன்! உங்கள் கால் தடத்தை அளவு எடுக்கிறேன்.
என் கால் ஷூ தடமா? ஏன்?

இங்கே ரெண்டு பேர் தடம் தெரியுது. ஒருவர் உங்கள் அளவு இருப்பார்.
சரியா இருக்கு! கான்ஸ்டபிள், உங்க பூட்ஸ் அளவு என்ன?
உங்க அளவு உள்ள ஒருவர், 7 அளவு ஷு அணிந்த இன்னொருவர்.
ஆக இருவரை விசாரிக்கணும்..!
ராயன்! சான்ட்ராவின் செக் புத்தகத்தை காணவில்லை!
அப்படி ஆனல் பணத்துக்காக கடத்தலா?
கான்ஸ்டபிள்! இந்த கடைப்பக்கம் ஏதாவது கார் வந்ததா?
ஒரு வேன் வந்துபோனது நினைவு இருக்கு!
அந்த வேனை இரண்டு தடவை இங்கே பார்த்து இருக்கிறேன்.
அது சான்ட்ராவின் நடவடிக்கையை கண்காணித்து இருக்குமோ?

போக்கு வரத்து விதிகளை மீறியதா என்பதை மட்டுமே நான் பார்த்தேன். அதன் நம்பரை குறித்து வைத்து உள்ளேன்.
அதன் விலாசத்தை கண்டு பிடியுங்க!
மிஸ்டர் ஜோ! இனி சான்ட்ரா இந்தக் கடையை யாரிடம் இருந்து வாங்கினாள் என்பதை கண்டு பிடிப்-போம்.!
அதனால் பயன் உண்டா?
சான்ட்ராவின் பாங்கு எது என்று அவருக்கு தெரிந்து இருக்கும். அவளது பரிசு பணத்தை அபகரிக்கவே அவள் கடத்தப்பட்டு இருக்க வேண்டும்.
மிஸ்டர் ராயன்! மிஸ் சான்ட்ரா, அந்தக்-கடையை வாங்கும்போது கவுண்டிஸ் பாங்கி செக் கொடுத்தார்.
அது போதும் மிஸ்டர் சுமித்!
மிஸ்டர் ஜோ! கவுண்டிஸ் பாங்கி மானேஜரிடம் போய் விசாரியுங்க
சரி ராயன். நீங்க போலீசை பாருங்க.
சான்ட்ராவை கண்காணித்த வேனை கண்டுபிடித்து விட்டோம், மிஸ்டர் ராயன்
நன்றி சார்ஜென்ட்! இனி நான் பார்த்துக்-கொள்வேன்!

அந்த வேனை குற்றவாளிகள் வாடகைக்கு எடுத்து இருக்கிறார்கள். அதன் உரிமையாளரிடம் விசாரணை நடத்துகிறேன்
ராயன் விசாரித்தார்.
அது சாமான் ஏற்ற பயன்படும் வேன்!
அதை நீங்க பயன் படுத்து - கிறீர்களா?
AUTO
ZIP
கடந்த வாரம் அதை வாடகைக்கு விட்டு இருந்தோம்.
வாடகைக்கு எடுத்த ஆள் முகவரியை கொடுங்க!
அவன் ஒரு குட்டை மனிதன். கடற்கரையில் ஒரு வாடகை பங்களாவில் தங்கி இருந்து இருக்கிறான்.
அதோ தெரிகிறது அந்த பங்களா? சான்ட்ரா அங்கு இருப்பாளா?
NO THROUGH RO
பங்களாவில் இருப்பவர்கள் கேட்டால் சொல்ல, ஒரு சாக்கு போக்கு தயாரா இருக்கணும்!

பெட்ரோ! இங்கே யாரோ வருகிருர்கள்
நான் பார்க்கிறேன்.
அவனைப் பார்த்தால் போலீஸ் அதிகாரி மாதிரி இருக்கான் பெக்கரை கூப்பிடு!
நான் இதை வாடகைக்கு எடுக்க வேண்டும். எப்போ காலி பண்ணுவீர்கள் என சொல்ல முடியுமா?
பங்களா உரிமையாளரை கேட்டீர்களா?
இல்லை என்ருல், இந்த வீட்டை நோட்டம்போட வந்து இருக்கிறீர் இல்லையா?
இல்லை... அதாவது...
அபாரம், பெட்ரோ!

டாக்டர் யார் இவன்?
ராயன். துப்பறியும் நிபுணன்.
சான்ட்ரா விஷயமா துப்பு துலக்க வந்து இருக்காஞ?
சீக்கிரம் இங்கு இருந்து கிளம்புவோம்.
பெட்ரோ! இந்த ராயன் நீண்ட நேரம் தூங்க ஊசி போடுகிறேன்!
பெக்கர் இந்த பெண்களை காருக்குக் கூட்டிப் போ. நான் சீக்கிரம் வர்றேன்.
ரெண்டு பேரும் வாங்க!
ராயன் காரில் வேறு ஆள் இல்லை.
அப்படி என்றால் அந்த கார் நகராதபடி செய்!
பெக்கர்! நிதானமா போ! ராயன் இன்னும் பல மணி நேரம் தூங்குவான்.

இது வாடகைக் கார். ஆகையால், ராயன் இதை கண்டு பிடித்து விடுவான்.
அதனால்?
HOTEL
ராயன், பெக்கரைப் – பார்க்கவில்லை. எனவே இனி அவன்தான் நம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்!
பல மணி நேரம் கழித்து ராயன் எழுந்தார்.
நான் எப்படி...?
என்னை அடித்துப் போட்டு விட்டு தப்பி- இருக்கிறார்கள்...
சான்ட்ரா வீட்டில் கண்டு பிடித்த கால் தடங்கள் இவர்கள்தான்! உம்... இருட்டி விட்டதே!
கையில் வலி! எனக்கும் மயக்க ஊசி போட்டு உள்ளனர்.
அவர்கள் தப்பி விட்டனர். ஏதாவது விட்டுச் சென்றுள்ளனரா என பார்க்கிறேன்.

ஒருவன் களி மண்ணில் பொம்மை செய்து இருக்கிறான். அவன் கைரேகை அதில் இருக்கிறதா பார்க்கிறேன். ஆ! இது என்ன?
இந்த டப்பா நிறைய மீன் புழு இருக்கே! ஆனா மீன் தூண்டில் எதுவும் இங்கே இல்லை! பிறகு இது எதற்கு?
கடற்கரை பாறையை எடுத்து உள்ளனர். குற்றவாளிகளுக்கு பொருட்களை சேகரிக்கும் பழக்கம் இருக்குமா?
பொம்மை மீது உள்ள கைரேகையை படம் எடுக்க வேண்டும். அதனால் முள் கரண்டியால் அதை எடுக்கிறேன்.
ராயன்- அந்த பொம்மையை தன் காரின் பின் சீட்டில் வைத்தார்.
கார் சக்கரத்தில் காற்றை இறக்கி விட்டு போய் இருக்கிறார்கள்.
6 மணி நேரம் தூங்க மயக்க மருந்து கொடுத்து விட்டு, காற்றையும் இறக்கி இருக்கிறார்கள். அவர்களை நான் பிடிக்க-கூடாது என்பது அவர்கள் திட்டம்.

அவர்களின் கால் தட அளவும், சான்ட்ரா வீட்டில் கண்ட கால் தட அளவும்...
ஒன்றுதான் என்று நிரூபிக்க வேண்டும்!
உம்... அந்த கார் எனக்கு சந்தேகத்தை கொடுக்கிறதே...!
BANK
ALH 636
ஹோ! அந்த சான்ட ண்ணுடன் வழ வந்தவன் நம் காரைப் பார்த்து சந்தேகப்-படுகிறான்!
ராயன்! அவன் பயங்கர வேகத்தில் போகிறான்!
2, 3 திருப்பங்களை தாண்டி விட்டால், பிடிப்பது கடினம்!

அவர்கள் என்னை பிடித்து விடக்—கூடாதே!
ராயன்! அந்த காரை காணும்?
இதோ கார் கவிழ்ந்த அடையாளம் தெரியுதே!
காரை நிறுத்து பார்ப்போம்!
ஜோ! டிரைவர் ஓடி விட்டான். நான் அவனைத் தேடுகிறேன். நீங்கள் இந்தப்—பெண்ணை கவனியுங்க!
சரி,
அவன் அதிக தூரம் போய் இருக்க முடியாது.!
ஏய் ராயன்! உன் கண்ணிலும் உன் கூட்டாளி கண்ணிலும் படாமல் தப்பி விடுவேன்!
சான்ட்ரா! மிஸ் சான்ட்ரா!
ஜோ! அவள் எப்படி இருக்கிருள்?
இவளை உடனடியா ஆஸ்பத்திரி கொண்டு போகணும்!

எலும்பு எதாவது முறிந்து இருக்குமோ?
இது வாடகை கார். நம்பரை குறித்துக்-கொள்-கிறேன்.
ஜோ! இவள் ஆபத்தாக இருப்பதால், உடனடியாக ஆஸ்பத்திரி விரைவோம்!
ஜோ! இவள்தான் சான்ட்ராவா?
அவளுடன் பேசிய பிறகே தெரியும்
அவள் மயக்கமா இருக்கிருள். அவள் பெயர், விலாசம் சொல்லுங்க!
அதைக்—கண்டுபிடிக்கத்தான் நாங்கள் முயல்கிறோம் டாக்டர்!
சரி! அவள் மயக்கம் தெளிய நேரமாகும். வரவேற்பு அறையில் இருங்க.
உடனடியா பாங்கி மானேஜருக்கு போன் செய்து, சான்ட்ரா கணக்கில் பணம் பட்டுவாடா செய்வதை நிறுத்தச்-சொல்ல—ணும்
ஆமா, ஜோ!

போன் செய்து-விட்டேன்.
சரி உட்காருங்க. அந்தப் பெண் மயக்கம் தெளியட்டும்.
மாந்திரீகம் செய்வோர் பல பொருட்களை பயன் படுத்துவார்கள்.
இந்தப்-பொம்மை, அவர்கள் பயன்படுத்தும் ஒரு பொருள்
மாந்திரீக வாதிகள் பொம்மையா?
ஓ! இப்போது எனக்கு-புரிந்து-விட்டது!
மிஸ்டர் ராயன்! என்ன?
இதே மாதிரி ஒரு பொம்மையை குற்றவாளிகள் தங்கி இருந்த-வீட்டில் எடுத்தேன்.
அப்படி என்றுல் நாம் தேடும் குற்றவாளிகள் மாந்திரீக கலே-தெரிந்த-வர்களா?
நான் எடுத்த அந்தப்-பொம்மை அப்போது தான் செய்யப் பட்டு இருந்-தது.

சார்! அவசர சிகிச்சை-
பிரிவில் இருந்து உங்களுக்கு
போன்!
முடிந்தவரை
முயன்று விட்டோம்.
அவள் இறந்து
விட்டாள்!
எங்களுக்கு
அதிர்ச்சி
அளிக்கிறது!
இந்தப் பெண்தான்
சான்ட்ராவா
என்பதை கண்டு
பிடிக்க முடிய-
வில்லை!
டாக்டர், கொஞ்சம்
நில்லுங்க!
ராயன்!
கல்லூரியில்
பிக்னிக்கின் போது
கடலில் குளித்தோம்.
சான்ட்ரா முதுகில்
அப்போது ஒரு மச்சம்
இருந்தது.
சரி
வாங்க!
அவள்
முதுகில் ஒரு பெரிய
மச்சம் இருக்கிறதா என்று
பார்க்க வேண்டும்!
மச்சம்
இல்லை.
எனவே
இவள்
சான்ட்ரா
இல்லை

சான்ட்ரா இன்னும் குற்றவாளிகள் பிடியில் தான் இருக்கிறாள். ராயன்! கண்டு பிடியுங்கள்!
சரி! கண்டு.... பிடிக்க முயல் - கிறேன்.
இறந்த பெண்ணின் ஆடைகளில் லண்டன் கடை விலாசமும், ஷூக் -களில் பாரீஸ் கடை விலாசமும் இருக்கு!
நன்றி சிஸ்டர்!
மறுநாள்
ஜோ! பொம்மையில் ரேகைகளை கிரீன் போர்ட் போலீசார் போட்டோ எடுத்து இருப்பார்கள்.
அங்கே போய் பாருங்க, ராயன்!
கிரீன்போர்ட் காவல்நிலையத்தில்
மிஸ்டர் ராயன்! இதோ அந்த போட்டோக்கள். அந்த களிமண் பொம்மை குறித்து எங்க டாக்டர் உங்களுடன் பேச விரும்புகிறார்.
இதற்கிடையில் சான்ட்ரா
நான் இருக்கும் இடம் எது? இன்னும் எவ்வ - ளவு காலம் அந்த கொடியவர்கள் என்னை அடைத்து வைப்பார்கள்? என் உடைகளை அணிந்து சென்ற அந்த பெண் எங்கே?
மரப் - பட்டைகள் அல்லது மூலிகைகளை எரிக்கும் வாசனை வருகிறதே! அது என்ன?

போலீஸ் ரசாயன ஆய்வு-கூடத்தில்
மிஸ்டர் ராயன்! இந்த பொம்மை மாந்திரீக காரி-யங்களுக்கு பயன் படுத்தப்-பட்டு உள்ளது.
மீன் புழு, கடல் பாறை அவை எதற்கு டாக்டர்?
அவையும், தேரை, காகம், எலி, மெழுகு வர்த்தி, மூலிகைகள் எல்லாம் மாந்திரீக-வாதிகள் பொருட்-கள்தான்!
வித்தி யாசமான வழக்கு தான்!
அந்த மாந்திரீக குற்றவாளிகளிடம் சான்ட்ரா மாட்டி-உள்ளார். அவர்களை கண்டு பிடிக்க-ணும்!
டாக்டர்! இந்த கைரேகை போட்டோக்களை லண்டன் ஸ்காட்லண்டு யார்டு போலீசுக்கு கொண்டு போகிறேன்
ராயன், ஸ்காட்லண்டு யார்டு போய் விஷயத்தைச் சொன்னார்
கைரேகை பயன் படுமா?
குற்றவாளிகள் மாந்திரீகம் வைப்பவர்கள் போல் தெரியுதே!

இதோ ஒருவன் இருக்கான். அவன் பெயர் பெட்ரோ. மாந்திரீக — ஆலோசகன் என்று கூறிக்-கொள்வான்.
மாந்திரீ—கத்தில் ஈடுபட்டு உள்ள குற்ற—-வாளிகள் குறைவு!
இறந்த பெண் பாரீசில் வாங்-கிய ஷூ அணிந்து இருந்த தால், ராயன் பாரீஸ் பறந்தார்
கைரேகை படங்களை பாரீஸ் போலீசாரிடம் காட்ட வேண்டும்!
பாரீஸ் காவல் துறையில்—
பெட்ரோ கைரேகையும் நீங்க கொண்டு வந்துள்ள கைரேகையும் பொருந்துது!
சுற்றுப்பயணிகளைத்தான் பெரும்பாலும் ஏமாற்றி இருக்கிறான். அவனது மாந்திரீக சாலைக்கு பயணிகளை அழைத்துச்—செல்லும் வழிகாட்டி களை விசாரணை செய்யலாம்!
இவர் மிஸ்டர் ராயன்! மாந்திரீக ஆலோசகர் பெட்ரோவைத் தேடி வந்து இருக்கிறார்.
மான் மார்ட்டையர் என்ற இடத்தில் அந்த ஆளின் மாந்திரீக மந்திர சாலை இருக்கு!
LES BIERES FINES

நீ, இவரை அங்கே அழைத்துச் செல். பணம் தருவார்.
சரி! வருகிறேன்.
இதற்கிடையில்
பெக்கர்! ஏன் இப்படி அவசரமா ஓடி வாறே?
பெட்ரோ! ராயன் இங்கேயும் வந்து விட்டான்!
உண்மையா? நீ பொய் சொல்கிருய்! எங்கே மிட்ஷி?
அவள் இறந்து-விட்டாள்.
எப்படி இறந்தாள்? விவரமா சொல்! முட்டாள்!
பெட்ரோ அமைதியா இரு. அவசரப்பட்டால் அவனுல் முழு விவரமும் சொல்ல முடியாது!
பெக்கர்! நடந்ததைச் சொல்!
2-வது செக்கை மாற்றி விட்டு வரும் வழியில் கார் விபத்தில் மிட்ஷி மயங்கி விட்டாள். எங்களை ஒரு கார் பின்தொடர்ந்தது. அதில் வந்தது ராயன். பணத்துடன் நான் தப்பி வந்தேன்.

தப்பிக்க வேகமாக காரை ஓட்டினேம். திருப்பத்தில் கவிழ்ந்து விட்டது.
காரில் மயங்கி கிடந்த மிட்ஷி எப்படி இறந்தாள்?
பெட்ரோ! அமைதியா இரு!
என்னை பிடிக்க போலீசார் வலை வீசினர்கள். எப்படியோ தப்பி பாரீஸ் வந்து விட்டேன்.
மிட்ஷி?
அவள் போதை மயக்க மருந்து ஊசியால்தான் உயிர் இழந்து இருக்க- வேண்டும், டாக்டர்!
நல்ல வேளை! போலீசில் சொல்லாமலே இறந்து விட்டாள்.
ராயன், நம்மைப் பற்றி எவ்வளவு தூரம் துப்பு துலக்கி-- இருக்கான்?
சான்ட்ராவின் பணத்தை எடு!

இது எனது புதிய மழைக்-கோட்டு.
அதன் தையலை வெட்டு-கிறேன்.
இந்த இங்கிலாந்து நோட்டுகளை சுற்றுப்பயணிகளிடம் கொடுத்து பிரான்ஸ் நோட்டு-களாக மாற்ற வேண்டும்.
அதில் நாம் ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும்!
சான்ட்ராவை என்ன செய்வது?
அவளுக்கு திருமணம் முடித்து விட வேண்டும். அதுதான் வழி!
யாருக்கு அவளை மணம் முடிப்பது?
பெக்லருக்கு மணம் முடித்தால் என்ன?
ஆ!
அவனுக்கு ஒரு மனைவி இருக்காளே!
அப்படி என்றால் மணம் முடிப்பது யார்?
பெட்ரோ, நீ அவளை திருமணம் செய்துகொள்! அவளுக்கு மயக்க ஊசியை அதிகரித்துக்-கொண்டே போகிறோம் அவளும் இறந்து விடக்-கூடாது.
உனக்கு மனைவி ஆன பின் உனக்கு எதிரா அவள் சாட்சியம் அளிக்க முடியாது.

இவளிடம் நிறைய பணம் இருக்கு. மணம் செய்தால் என்ன?
மிஸ்டர் ராயன்! இந்த கட்டிடத்தின் கடைசி மாடிதான் பெட்ரோவின் மாந்திரீக சாலை. வாடகைக்கு எடுத்து - இருக்கிறான்.
AU PETIT MOKA
ரொம்ப நன்றி!
நான் பெட்ரோவின் நண்பன்.
படிக்கட்டு வழியா மேலே போங்க!
பெட்ரோ இருப்பார் இல்லையா?
தெரிய - வில்லை. போய் - பாருங்க!
மாந்திரீக சாலையில்___
உன்னை மணப்பதா? உனக்கு பைத்தியமா?
சான்ட்ரா! சொல்வதைக் கேள். இந்த பெட்ரோ பெரிய புத்திசாலி!

இவனை
திருமணம் செய்வதன்
மூலம் பாரீஸ் நகர வாழ்க்கையை
நீ அனுபவிக்கலாம்!
குற்றவாளியை
மணப்பதா? முடியாது.
ஆமா,
குற்றவாளி.
உன்னை
உயிரோடு
விட்டு
வைத்து-
இருக்கும்
குற்றவாளி!
சீ!
என்னை
விடு!
பெட்ரோ
அவள் நகத்தை
வெட்ட –
வேண்டும்!
இவளை
மணக்காமல்
விடமாட் –
- டேன்.
சவால்
டாக்டர்!
மிருகமே!
உன்னை மணப்பதை
விட சாவேன்!
நல்லா
யோசித்து பார்!
சான்ட்ரா!

உன்னை வழிக்கு கொண்டு வர இதுதான் வழி.
ஐயோ வேண்டாம்! நோ!
என்னை நிரந்தரமா போதை மயக்கத்தில் வைக்கவா திட்டம் போடுகிறாய்.
ஆமா, கண்ணே!
கூடிய சீக்கிரம் இது இல்லாமல் உன்னால் இருக்க முடியாது. அப்போது நீ எங்கள் தயவை நாடுவாய்! கெஞ்சுவாய்!
அப்போது திருமணம் செய்தால் தான் ஊசி போடுவோம் என்று நிபந்தனை விதிப்போம். நீ சம்மதித்தே ஆக வேண்டும்!
எனக்கும் மிட்ஷியின் கதிதானா?
இதற்கு இடையில் கூரை வழியாக ராயன்—
யார் தயவை யார் நாடுகிறார்கள் பார்ப்போம்!
பெட்ரோ! ஜன்னல் வழியா நுழைவது யார்?

மிஸ் சான்ட்ரா! நான் உன் சக ஆசிரியர் ஜோவின் நண்பன்!
இது ராயன். பெக்கரை கூப்பிடு!
டாக்டர் நில்லும்!
உங்க சிகிச்சை இங்கே ஒருவருக்கு தேவை.
என்ன தைரியம்?
ராயன்! இவ்வளவு சீக்கிரம் நீ வருவாய் என எதிர்பார்க்க வில்லை!
டாக்டர், அப்படியே நில். இல்லை...!
நீ தனியாகவா வந்தாய்?
என்னுடன் யாரும் வரவில்லை!
ஜன்னலை அடைக்க வேண்டும்
ஏய்! பெட்ரோ!

இந்தா! பதிலுக்கு வாங் - கிக்கோ!
ஆ!
சான்ட்ரா! அந்த டாக்டர் எங்கே போகிறான் பார்!
சரி, ராயன் சார்!
டாக்டர் எங்கே போனான்?
சண்டை நீடித்தது.
பெட்ரோ விழும்போது

பெட்ரோ மயங்கி விட்டான்!
இவனை கட்டிப் போட வேண்டும்! மிஸ் சான்ட்ரா! சான்ட்ரா!
ராயன்! பின்னல் பாருங்க!
நீதான் பெக்கரா!
சான்ட்ரா! அவனை உதை!

சார் ஜாக்கிரதை!
ஏய்! எழுந்திரு! என் குத்தை நீ தாங்கு!
பெக்கர் எழும்போது, கோட்டுக்குள் கை விட்டு—
துப்பாக்கியை கீழே— போடு!
சான்ட்ரா! அந்த திரைச்சீலையை கிழி.
இவர்களை கட்டிப்— போடு— வோம்.
ராயன் சார்! ரொம்ப நன்றி!
எங்கே அந்த மந்திர, தந்திர— டாக்டர்?
முதலில் இவர்களை கட்டிப் போடுவோம்!

சான்ட்ரா! அந்த டாக்டர் இங்கே மறைய இடம் இருக்கா?
இல்லை ராயன்!
கீழே காவலாளியிடம் கேட்கிறேன்.
வா.
சார்! யாரும் வெளியே போகவில்லை.
அந்த டாக்டரைப் பார்த்தேன். திடீர் என்று காணவில்லை.
மிஸ்டர் ராயன்! அவன் எங்கே மறைந்து இருப்பான் என்று யோசிக்கிறேன்.
அவன் தப்பிபோய் இருக்க வழி இல்லை.
இப்படி ஆள் உயர விசித்திர பொம்மைகளை நான் பார்த்தது இல்லை!
சுற்றுப்பயணிகளை கவர சேகரித்து— வைத்து உள்ளனர்.
சான்ட்ரா! மூக்குப்பொடி டப்பா- இருக்கே! மூவரில் பொடி போடுவது யார்?

பெட்ரோ பொடி போடுவான்.டாக்டர் எப்போதாவது போட்டு தும்மிக்-கொண்டே இருப்பான்!
இந்த மூக்குப்-பொடியை உரிஞ்சுகிறேன்.
நீங்க பொடி போடு-வீங்களா சார்!
பொடி போடும் பழக்கம் இல்லே. சும்மா போட்டு பார்த்தேன்.
அச்! அச்! அச்!
சான்ட்ரா! சக்தி வாய்ந்த பொடி!
அச்! அச்!
சான்ட்ரா! தும்மியது யார்?
நான் இல்லே. இந்த பேய் உருவம்தான் தும்மியது!
பேய் பொம்மை தும்மியதை இப்போதுதான் கேள்விப்-படுகிறேன்.

இதை வெட்டிப் பார்த்து விட - வேண்டி - யதுதான்!
வேண்டாம் ராயன். நானே வெளிப்பட்டு விட்டேன்.
ராயன்! போலீசை கூப்பிடு- கிறேன்.
ராயன்! என்னை சுட்டு விடாதே!
நீ சரண் அடைந்து விட்டால் துப்பாக்கிக்கு வேலை இராது!
போலீஸ் அதிகாரி அவர்களே! இவர் களிடம் இங்கி- லாந்து கரன்சி நிறைய உள்ளது.
இதோ இங்கிலாந்து நோட்டுகள்!
சான்ட்ரா! இது முழுவதும் உன் பணம்! அவர்கள் செலவு செய்தது போக மீதி!
பணத்தை எப்படி எடுத்தார்கள்?

போதை மயக்கத்தில் உன்னிடம் 5 ''செக்'' களில் கையெழுத்து வாங்கி உள்ளனர். 2 ''செக்''கை மாற்றி, மிட்ஷி மூலம் பணத்தை எடுத்து-விட்டனர்.
5 இடங்களில் பணத்தைக் கொடுக்க உன் கையெழுத்துடன் பாங்கிக்கு கடிதமும் கொடுத்து உள்ளனர்.
இவனிடம் இங்கிலாந்து பாங்கி செக் புத்தகம் இல்லை!
பெக்கரை சோதனை போடுங்க!
இதோ இவனிடம் இருக்கு. இதில் செக்குகளில் மிஸ். சான்ட்ரா கையெழுத்து போட்டு இருக்கிறார்.
என்னிடம் பணம் இருப்பது இவர்களுக்கு எப்படி தெரியும்.
நீ பரிசு பெற்றது எல்லா பத்திரிகைகளிலும் வந்ததே!
ஆமாம். பத்திரிகையில் படித்து உன்னை கடத்தினோம். உனக்கு போதை மருந்து கொடுத்து கையெழுத்து வாங்கினோம்.

அந்தப் பெண் மிட்ஷி?
அவள் உன் போலவே இருந்ததால் ஆள் மாறாட்டம் செய்து உள்ளனர்.
அந்த கடற்கரை பங்களாவில் அடைத்து வைத்துதான் எனக்கு ஊசி போட்டனர்
இதோ உன் கையில் ஊசி குத்திய வடுக்கள்!
ராயன்! இங்கே நாம்பேசியதை கோர்ட்டில் நிரூபிக்கவே முடியாது. ஏன் என்றால் கையெழுத்து போட்டு இருப்பது சான்ட்ராதான்.
ஆள் மாறாட்டம் செய்த மிட்ஷி இறந்து விட்டாள். அதற்கு நீ பதில் சொல்ல வேண்டும்.
நான் கொலை செய்தேனா?
ராயன் கொடுத்த கைரேகை போட்டோக்கள், துப்பறிந்த விவரம் ஆகியவற்றை வைத்து போலீசார் மூவரையும் கைது செய்தனர்.
பாவம் மிட்ஷி இறந்து விட்டாள்!
கார் விபத்தில், மயங்கிய அவள் இறந்து விட்டாள்.
அதற்கு காரணம் போதை மருந்து!
அவளுக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு?

பெட்ரோவின் மாந்திரீக மந்திரசாலைக்கு வரும் சுற்றுப்-பயணிகளை மிட்ஷி உபசரித்து இருக்கிறாள்.
இந்த மாதிரி ஒரு உடையை அணிந்து இருக்கிறாள். இது அதிர்ஷ்ட உடை என்று கூறி— பெட்ரோ, சுற்றுப்-பயணிகளுக்கு விற்று— ஏமாற்றி இருக்—கிறான்.
நான் ஒரு பாங்கியில் போட்ட பணத்தை எப்படி இரண்டு இடங்களில் எடுத்து— இருக்கிறார்கள்.
நீ சுற்றுப்பயணம் செய்வதாகவும், 5 ஊர்களில் பணம் கொடுக்கும்படி உன்னிடம் கையெழுத்து வாங்கி கடிதம் கொடுத்து உள்ளனர். அந்த கடிதத்தை உன் டைப்ரைட்டரில் அடித்து, போதை—மயக்கத்தில் உன்னிடமே கையெழுத்து வாங்கி—கச்சிதமாக முடித்து—விட்டனர்.
ஜோவை, நீ உன் வீட்டுக்கு வர சொல்லா—விட்டால், இதைக்கண்டு பிடிக்கவே—முடியாது.
மிஸ்டர் ஜோ எங்கே?
உனக்காக லண்டனில் காத்து இருக்கிறார் வா, உடனே லண்டன் திரும்புவோம்.
முற்று

மூடும் முன்...!

கீழே ஒரு பறவை, ஒரு வண்ணத்துப்பூச்சி, மூன்று முகங்கள் மறைந்து உள்ளன. கண்டுபிடியுங்கள்.